வெளியிலே விற்கின்ற சரக்குகளுக்கு, வரி ஏய்ப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளை எடுப்பார்களா என அறிய விரும்புகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்திற்கிணங்க அன்றைய தினம் சேகோ-சர்வ் நிறுவனத்தினுடைய வரி ஏய்ப்பைத் தடுக்கின்ற வகையில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கூறியிருக்கின்றேன். அவைக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 45, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

45—

தனிப் பஞ்சாயத்து அமைத்தல்

***4853—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதியிலுள்ள போகநல்லூர் கிராமத்தை தனிப் பஞ்சாயத்தாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள போகநல்லூர் கிராமத்தை தனிப் பஞ்சாயத்தாக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

திரு. எம். சுப்பையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதி போகநல்லூர் பஞ்சாயத்து, போகநல்லூர், சுந்தரேஸ்வபுரம், சிதம்பரப்பேரி, செண்பகநல்லூர், மீனாட்சிபுரம், ஒத்தவேடு என்கிற இராமேஸ்வரம், சங்கணாப்பேரி ஆகிய கிராமங்களை உள்ளடக்கியது. இந்தப் பஞ்சாயத்திலே 4,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2003 நவம்பர் 5]

வாக்குகள் உள்ளன. மொத்தம் ஜனத்தொகை 7,000 உள்ளது. அதுமட்டுமல்லாமல் குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம்—எனது சொந்த பஞ்சாயத்தான சாயமலை பஞ்சாயத்தில் சாயமலை,வலசை, சிதம்பராவரம், சாயமலை பச்சேரி, கொக்குவலம், உங்கமடையார் கோவில்பட்டி, ஆராய்ச்சிபட்டி, ஆவரந்தை, மேலச் சியாமியாபுரம், கீழச் சியாமியாபுரம், திருமலாபுரம், இராமலிங்கம்பட்டி, ஒத்தவேடு ஆகிய 13 கிராமங்களை உள்ளடக்கியது. அந்தப் பஞ்சாயத்திலே 7,000 வாக்குகளும் உள்ளன. இன்னும் வாக்குகள் சேர்க்காமல் Population கிட்டத்தட்ட 12,000 ஜனத்தொகை இருக்கிறார்கள். இதை ஏன் கூறுகிறேன் என்றால், இதை இரண்டாகப் பிரித்தால் அங்குள்ள அந்தப் பஞ்சாயத்துக்கு ஒரு தன்னிறைவு கிடைக்கிற வகையில் நிதி ஆதாரத்தைப் பெற்று, அந்தக் கிராமத்திற்கு அடிப்படை வசதிகள் நல்ல முறையில் செய்து கொடுக்க ஏதுவாக இருக்கும் என்பதற்காகத்தான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது திட்டம் இல்லையென்று கூறினார்கள். மத்திய அரசு ஒரு தொகுதி வரையறுக்கப்பட தடையாணை வழங்கியுள்ளதாகவும் அறிகிறேன். ஆனால், அந்தத் தடை நீங்கியதற்கு பிறகு இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதியிலுள்ள போகநல்லூர் கிராமத்தைத் தனிப் பஞ்சாயத்தாக ஆக்குவது குறித்த கருத்துரு ஏதும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வரப்பெறவில்லை. ஊராட்சிகளைப் பிரிப்பதாக இருந்தால் ஏற்கெனவே உள்ள ஊராட்சி மற்றும் பிரிக்கப்பட்ட ஊராட்சி ஆகியவற்றின் வார்டுகளின் எல்லைகள், உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் இட ஒதுக்கீடுகள் ஆகியவற்றில் மாற்றம் ஏற்படும். சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றத் தொகுதி சீரமைப்பு ஆணையத்தின் அறிவிப்பின்படி 01-08-2002 முதல் சீரமைப்புப் பணி முடியும் வரையில் ஊராட்சி அமைப்புகளின் எல்லைகளைச் சேர்க்கவோ, பிரிக்கவோ அல்லது மாற்றவோ செய்யக்கூடாது என்ற ஆணையுள்ளதால், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைகள் இரண்டையும் பரிசீலிக்க வாய்ப்பில்லை எனபதைத் தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழக அரசு வருவாய் குறைவாக இருக்கிற நகரப் பஞ்சாயத்துகளை எல்லாம் கிராமப் பஞ்சாயத்துகளாக மாற்றுவது குறித்து யோசித்துக் கொண்டிருப்பதாக இந்த அவையிலே சொல்லப்பட்டது. அந்த நடவடிக்கை இப்போது..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன், இது மூலக்கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 46, திரு. கே.எஸ். பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

46—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***27375—திரு. கே.எஸ். பழனிசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஒன்றியம், 47 வழியோர கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்தை அரசு விரைந்து செயல்படுத்துமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஒன்றியத்தைச் சார்ந்த 47 வழியோரக் கிராமங்களுக்கு, புதிய திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கப்படும். இத்திட்டப் பணிகள் வெகுவிரைவில், 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.